**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.480/2024**

2025 ம் ஆண்டு மே மாதம் 28 ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.இராமச்சந்திரன், B.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | -திரு.யுவராஜா | **PW-4** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | -பெரியசாமி | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | -42 |

**(எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை:-**

நான் ஈரோடு அவல்பூந்துறையில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். 11.10.2020 அன்று போலீசார் கஸ்பாபேட்டை தாண்டி வடக்கு வழியம்பாளையம் என்ற இடத்தில் எல்பிபி வாய்க்கால் அருகே ஒரு விபத்து நடந்தது அந்த இடத்தை போலீசார் என் முன்பாகவும் கோபாலகிருஷ்ணன் என்பவர் முன்பாகவும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் மேற்படியாரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:-

விபத்தில் அடிபட்ட ரமேஷ் என்பவரது மனைவி எனக்கு உறவினர் என்றால் தெரிந்தவர்தான். போலீசார் நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் விபத்து நடந்தது குறித்து எழுதியிருந்தார்கள் அதில் தான் நான் சாட்சி கையெழுத்து போட்டேன். மேற்படி ஆவணத்தை படித்துப் பார்த்தேனே என்றால் ஆமாம். மேற்படி சம்பவயிடத்திற்கு

தலைமை காவலர் வந்தாரா அல்லது உதவி ஆய்வாளர் வந்தாரா என்றால் சரியாக பதவி தெரியவில்லை. ஸ்டேஷனில் வைத்து கையெழுத்து செய்தேனோ என்றால் சம்பவம் நடந்த இடத்தில் தான் கையெழுத்து செய்தேன். போலீசார் எத்தனை நபர்கள் வந்தார்கள் என்றால் ஜீப்பில் சிலர் வந்தார்கள், குறிப்பாக எண்ணிக்கை தெரியவில்லை, அதற்கு முன்பாகவே பைக்கிலும் போலீசார் வந்தனர். விபத்து நடந்த இடத்திற்கு இரவு 12 மணிக்கே நான் சென்றேனா என்றால் ஆமாம். அப்பொழுது போலீசார் என்னை விசாரித்தனரா என்றால் இல்லை, காலையில் தான் விசாரித்தார்கள். நான் சொன்னவாறு சொன்ன தேதியில் கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு தற்பொழுது போலீசார் கேட்டுக் கொண்டதன் பெயரில் அவர்களுக்காக ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**